உ
சிவமயம்



# அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்
# புற்றளை

## புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் பிரமாணங்களின் கோவை

புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை
புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்
புலோலி தெற்கு,
புலோலி

உ

சிவமயம்



# அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்

# புற்றளை

புகழ்வோம் கணபதி நின் பொற்கழலை நாளும்
திகழ்வோம் பெரும்கீர்த்தி சேர்ந்தே ~ இகழ்வோமே
புல்லரக்கப் பாதகரின் பொய்யெலாம்; ஈங்கிதுகாண்
வல்லபை கோன் தந்தவரம்.

~ பாரதியார் ~

சித்தி விநாயகர் துணை

# அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்
# புற்றளை

## புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை

## புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் பிரமாணங்களின் கோவை

அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தினையும் அதன் பரி பாலனத் தினையும் அதனோடு இணைந்த பணிகளையும், இந்துமத அற நெறிப்பணி களையும் மேற்கொள்ளும் நோக்குடன் புற்றளை வட்டார இந்து பெருமக்களால் அதிகாரம் அளிக்கப்பட்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டவிதிகளின் படி பொதுத்தரும நம்பிக்கைப் பொறுப்பாக உரு வாக்கப்பட்டு அதன் செயற்பாட்டிற்கான விதிகளை குறித்துரைக்கும் பிர மாணங்களின தொகுப்புக்கோவை.

**01.** பெயர் இச்சபை " புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை " என அழைக்கப்படும். (இதன்கீழ் ஆலய பரிபாலனசபை என அழைக்கப்படும்.)

**02.** ஆலய பரிபாலனசபையின் நோக்கங்கள்

(i) (அ) அருளமிகு புற்றளைச்சித்திவிநாயகர் ஆலயத்தினை பரிபாலனம் செய்தல்;

(ஆ) புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் கட்டிடங்கள், மற்றும் வசதிகளை மேம்படுத்துதலுடன் அவற்றைத் தொடர்ந்து பராமரித்தல் ;

(இ) ஆலயத்தின் அசையும், அசையாச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாத்தல, நிர்வகித்தல்;

(ஈ) ஆலயத்திற்காகச் சேரும் தர்மநிதியை பெறுதலும் சேமித்தலும் திருப்பணியின் நிமித்தம் செலவு செய்தலும் ;

(உ) ஆலயத்திற்குரிய தர்மநிதியினை நிர்வாகசபையின் தீர்மானத்தின் கீழ் நிதி நிறுவனங்கள், தொழில்துறைகளில் முதலீடுசெய்தலும் வருமானத்தினை தர்மநிதியில் சேர்த்த லும் ;

(ஊ) புற்றளை சித்திவிநாயகர் ஆலய அடியார்கள் தமது சுதந்திரமான வழிபாட்டு உரிமைகளையும் நேர்த்திக்கடன்களையும் நிறைவேற்றும் உரிமையை உறுதிப்படுத்துதல் ;

(எ) ஆலயத்திற்காகச்சேரும் நிதியினை இந்து சமயத்தை வளர்த்தலுக்கும், சமூகப் பணி, அறப்பணி ஆற்றுவதற்கும் பயன்படுத்துதல் ;

(ஏ) ஆலயத்தின் மூர்த்திகரத்தை கூட்டுதலும் ஆலயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்தலும் .

(ii) (அ) சமூக இன, மத, மொழி, சாதி, கலாச்சார வேற்றுமைகளை ஒழித்து சமூகத்தின் வளர்ச்சிக்காக உதவுதலுக்கு பணியாற்றுதல் ;

(ஆ) உலகளாவிய ரீதியில் உள்ள சமய, ஆன்மீக, சமூக நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதலும் அமைதிக்கும் சமாதானத்திற்கும் ஒற்றுமைக்காகவும் செயற் படுதல்;

(இ) இந்து சமய சாஸ்திரங்கள், நூல்கள் ஏடுகளை தொகுத்தலும் பேணுதலும் அவற்றின் கற்கையினை ஊக்கப்படுத்தி இந்து தர்மத்தின் உண்மைப்பொருளை இந்துக்கள் உணர பணி ஆற்றுதல் ;

(ஈ) ஆலயத்தின் அடியார்கள் நன்மை கருதி அறநெறிப்பாடசாலை, ஆன்மீக சாதனை நிலையம், நூலகம் நிறுவுதலும் பராமரித்தலும் வளர்த்தலும் ;

(உ) சமூகத்தின் ஒடுக்கப்பட்ட, வறுமைப்பட்ட மாணவர்கட்கு அவர்களது கல்விவளர்ச்சிக்கான நிதிஉதவிகள், அன்பளிப்புகள், நிவாரணங்கள்,புலமைப்பரிசுகள் வழங்குதல்;

(ஊ) அனாதைவிடுதிகள், சிறுவர்பராமரிப்பு இல்லங்கள், வயோதிப இல்லங்கள், மருத்துவ நிலையங்கள், வைத்தியசாலைகள் அமைத்தலும் பேணுதலும் செயற்படுத்தலும் என்பதுடன் வேறு நிறுவனங்கட்கு நிதிஉதவி அளித்தலும் ;

(எ) இந்துசமய வளர்ச்சிப்பணிகளில் பணிபுரியும் சுவாமிகள், பிரமச்சாரிகளை அழைத்தலும் இந்து சமய பிரச்சாரத்தினை இந்துகட்கு மத்தியில் மேற்கொள்ளுதலும் ;

(ஏ) இந்துசமய வளர்ச்சிப்பணிக்காக தம்மை அர்ப்பணித்த சுவாமிகள், பிரமச்சாரிகள், தொண்டர்கள் மற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களை பராமரித்தல், பேணுதல், நிதி உதவி அளித்தல் இணைந்து பணியாற்றுதல்;

(ஐ) இந்து சமய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்க்காக கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், கூட்டங்கள், கூட்டுவழிபாடுகள், பஜனைகள்,வகுப்புகள், வாதங்கள், மாநாடுகள், சுற்றுப்பயணங்கள், தலயாத்திரைகள் மற்றும் பண்டிகைள் விழாக்களை ஒழுங்குபண்ணுதலும், ஏற்பாடுசெய்தலும், ஊக்குவித்தலும் ;

(ஒ) இந்துசமய ஆன்மீக நூலகங்களை நிறுவுதல் புத்தகங்களை பெறுதல் சஞ்சிகை கட்கு சந்தாதாரராகுதல் , புத்தகங்கள் , ஏடுகள், மாதாந்தரிகள் என்பவற்றினை பெறுதலும் பயன்பாட்டுக்கு விடுதலும், ஆராய்ச்சிக் கற்கைக்கான மையமாக விளங்குதலும்;

(ஓ) இந்து தர்மக்கற்கைகட்காக ஆராய்ச்சிக்காக கலாச்சார கற்கைக்காக நிதிகளை ஏற்பாடு செய்தலும் பரிசுவழங்குதலும், புலமைப்பரிசு வழங்குதலும், இந்துதர்ம மாநாடுகள், கருத்தரங்குகட்காக பங்குபற்றுனர்களை இலங்கைக்குள்ளும் வெளிநாடுகட்கும் அனுப்புதலும், நிதிஉதவி அளித்தலும்;

(ஔ) இந்துதர்ம சமய நூல்களை அச்சிடுதல், வெளியிடுதல், விற்பனை செய்தல் மாதாந்த, வருடாந்த ஏடுகளை, பத்திரிகைகளை, அச்சிட்டு வெளியிடுதல், இந்த நோக்கத்திற்காக அச்சகத்தினை உருவாக்குதல் வேலையாட்களை அமர்த்துதல் அல்லது வாடகைக்கு அச்சகத்தினைப் பெறுதல் .

(iii) மேலே (i), (ii) குறிப்பிட்ட பணிகளுடன் வேறும் இந்து தர்மத்தின் பாற்பட்ட பணிகளை ஆற்றுதல்.

## 03. ஆலய பரிபாலனசபை உறுப்பினராவதற்குரிய தகமைகள்

(i) பதினெட்டு (18) வயதிற்கு மேற்பட்டவரும் நல்லொழுக்கமுடையவரும், இந்து சமயத்தைச் சேர்ந்தவரும் இக்கோவையின் பிரமாணங்களுக்கும் பொதுச்சபையின் தீர்மானங் களுக்கும் கட்டுப்பட்டு நடக்க இணங்குபவரும் என்பதுடன்

(அ) இவ்வாலயத்தில் பரம்பரையாக ஈடுபாடுள்ளவர்களும் ஏதோ ஒருவகையில் ஈடு பாடுடையவர்களும் ;

(ஆ) வேறு கிராமங்களில் இருந்து வந்து திருமணம் செய்வதன் மூலம் இவ்வட்டாரத் தினை வதிவிடமாகக் கொள்ள உத்தேசித்துள்ளவரும் அல்லது கொண்டிருப்பவரும் தகுதியுடையவராவார்.

(இ) இந்த ஆலயத்தில் உபயம் செய்பவர் எவரும் தகுதியுடையவராவார்.

(ii) ஆலய பரிபாலனசபையின் உறுப்பினர்கள் மட்டும் பொதுச்சபைக்கூட்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றவோ, வாக்குரிமையைப் பிரயோகிக்கவோ தகுதி உடையவராவார்கள் என்பதுடன் புற்றளை வட்டாரத்தில் உள்ள பதிவு செய்யப்பட்டுள்ள அமைப்புக்களின் பிரதிநிதிகள் தலா ஒருவர் வீதம், முன்கூட்டியே எழுத்துமூலம் நிர்வாகசபைக்கு விண்ணப்பித்து அனுமதிபெற்று பொதுச்சபைக்கூட்டத்தில் "பார்வையாளர்" அந் தஸ்த்தில் பங்குபற்றலாம்.

மேற்படி (i) பிரிவின்படி தகுதிகளிலிருந்தும் கோவிலில் வேலை செய்வதன் பேரில், ஊதியம் பெறும் எவரும் அல்லது சபையின் ஊழியர் எவரும் அங்கத்தவராவதற்கு தகுதிபெறுகின்ற போதும் தொழில் புரியும் காலத்தில் வாக்குஅளிக்கத் தகுதியுடையவரல்லர்.

(iii)(அ) இப்பிரமாணத்தில் உபபிரிவு (i) இன் கீழ் தகுதி இருக்கும் ஒருவர் நிர்வாகசபையால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகைப்பணத்தை சந்தாப்பணமாகச் செலுத்தி தம்மை ஆலய பரிபாலனசபையின் உறுப்பினராக்கிக்கொள்ளலாம் என்பதுடன் அத்தகைய சந்தாப்பணத்தினை ஒவ்வொரு ஆண்டும் அவ்வாண்டின் பங்குனி 31ம் திகதிக்கு முன் னராகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் செலுத்தாதவர்கட்கு நினைவூட்டல் கடிதம் மூலம் சந்தாப்பணத்தினை செலுத்துமாறு தேவைப்படுத்த செயலாளர் கட மைப்பட்டுள்ளார்.

(ஆ) சந்தாப்பணத்தின் தொகையினை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கவும், மாற்றி அமைக்கவும் நிர்வாகசபை அதிகாரம் கொண்டுள்ளது என்பதுடன் ஆயுட்கால உறுப்பினருக்கான தொகையையும் குறித்துரைக்க நிர்வாகசபை தேவைப்படுத்தப்பட் டுள்ளது.

(இ) வருடாவருடம் பணம் செலுத்துவோர் சாதாரண உறுப்பினர் என அழைக்கப்படுவர் என்பதுடன், குறித்த ஆண்டு சந்தா பணம் செலுத்தத்தவறின அவரது உறுப்புரிமை இழக்கப்படுவதுடன் மீள உறுப்பினர் ஆவதற்கு புதிதாக விண்ணப்பித்து முந்தைய உறுப்புரிமைகாலத்தில் இருந்து விண்ணப்பித்தவரை செலுத்தத்தவறிய பணத்தினை அல்லது ரூபா 1500/= இனை, இதில் எத்தொகை குறைந்ததோ அதனைச் செலுத் தியும் நடப்பு ஆண்டு சந்தாப்பணத்தை செலுத்தியும் உறுப்புரிமையைப்பெற்றுக் கொள்ளலாம்.

(ஈ) உறுப்பினர் இடாப்பு ஒவ்வொருவருடமும் சித்திரை 30ம் திகதி மூடப்படுதல் வேண்டும். இத்திகதியின் பின் புதிய உறுப்பினர்கள் மட்டும் புதிய உறுப்புரிமைக்காக விண்ணப் பித்து பெறத்தகுதி உடையவர்கள்.

## 04. உறுப்புரிமை முடிவு

மரணத்தால் அல்லது மாறாத மனநோயினால் அல்லது 8 வது பிரிவின்படி கூட்டப் பெற்ற பொதுச்சபைக்கூட்டம் ஒன்றின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் தகுந்த காரணங்களுக்காக விலக்கப்படுவதால் அல்லது எழுத்துமூலம் தாமாகவே விலகுவ தாக அறிவிப்பதால் உறுப்பினர் ஒருவர் உறுப்புரிமையை இழப்பார்.

## 05. உறுப்பினரை இடைநிறுத்தலும் நீக்குதலும்

(i) (அ) இவ்வாலயம் சம்பந்தப்பட்ட நிதி தொடர்பான வகையில், அசையும் அசையாச் சொத் துக்கள் விடயத்தில் அல்லது வேறு ஏதேனும் விடயத்தில் உறுப்பினர் ஒருவரின் மீது சந்தேகம் ஏற்பட்டாலோ எழுத்துமூல தகவல் கிடைக்கப்பெற்றாலோ, நேர்மையற் றவர் என அல்லது சபையின் நோக்கங்களுக்கு விரோதமாக செயற்படுகிறார் என நம்பினால் செயலாளர் அவரை உடனடியாக உறுப்பினர் பதவியில் இருந்து இடை நிறுத்துவதுடன், அதனை நிர்வாக சபையின் கவனத்திற்கு ஒரு வார காலத்திற்குள் கொண்டு வந்து அங்கீகாரம் பெறுதலும் வேண்டும்.

(ஆ) இனம்காணப்பட்ட விடயங்கள் தொடர்பில் விளக்கம் கோரவும் நிர்வாகசபையின் அனுமதியுடன் சுதந்திரமான விசாரணையாளர்கள் மூலம் விசாரணை செய்யவும் செயலாளர் வேண்டும் என்பதுடன், செயலாளர் விசாரணை முடிவினை பொதுச் சபைக்கு அறிவிக்கவும் வேண்டும்.

(இ) இவ் ஆலயம் சம்பந்தப்பட்ட, நிதி, அசையும் அசையா சொத்துக்கள் தொடர்பான வகையில், உறுப்பினர் ஒருவரின் நடத்தை நேர்மையற்றது எனவும் அல்லது சபையின் நோக்கங்களுக்கும், பிரமாணங்களுக்கும் விரோதமானது எனவும் செயலாளர் விசா ரணை அறிக்கையினை 8 வது பிரிவின்படி கூட்டப்பெறும் பொதுச்சபைக்கூட்டத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் அங்கீகரிப்பின் அவ்வுறுப்பினரை ஆலய பரிபாலனசபையில் இருந்து நீக்கலாம். இப்பிரிவின்படி விலக்கப்பட்ட உறுப் பினருக்கு எழுத்து மூலம் பொதுச்சபை கூட்டத் தீர்மானத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று செயலாளரினால் அனுப்பப்படல் வேண்டும்.

(ஈ) மேலே குறிப்பிட்ட பிரிவு 5 (i) (அ) தொடர்பான குற்றங்கள் எது தொடர்பிலும் உறுப்பின ருக்கு எதிராக வழக்கொன்று ஆலய பரிபாலனசபையின் சார்பில் தாக்கல் செய்யப் பட்டால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து அந்த உறுப்பினர் தமது உறுப்பினர் பதவியில் இருந்து இயல்பாகவே இடைநிறுத்தி வைக்கப்பட்டவராவார். நீதிமன்ற வழக்கில் அவர் குற்றமற்றவர் என்று தெளிவாக தீர்மானிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படின் அவர் மீளவும் ஆலய பரிபாலனசபை உறுப்பினராக சேர்த்துக் கொள் ளப்படலாம்.

(ii) (அ) இவ்வாலயம் சம்பந்தப்பட்ட நிதி தொடர்பான வகையில், அசையும் அசையாச் சொத் துக்கள் விடயத்தில் அல்லது வேறு ஏதேனும் விடயத்தில் நிர்வாக சபையைச் சேர்ந்த தலைவர், உபதலைவர், உதவிச்செயலாளர், பொருளாளர் உட்பட்ட உறுப்பினர் ஒரு வர் மீது சந்தேகம் ஏற்பட்டாலோ,நேர்மையற்றவர் என அல்லது சபையின் நோக்கங்

களுக்கு விரோதமாக செயற்படுகிறார் என நம்பினால் அத்தகைய குற்றச் சாட்டை சுமத்துபவர் உட்பட ஐந்து உறுப்பினர்கள் விசேட பொதுச்சபைக்கூட்டத்தை கூட்டு மாறு எழுத்து மூலம் குற்றச்சாட்டுக்களையும் காரணங்களையும் குறிப்பிட்டு செயலா ளரைக் கோரலாம் என்பதுடன் இப்பிரமாணத்தின் பின்வரும் பிரமாணங் களில் குறித் துரைக்கப்பட்டதன்படி பொதுச்சபை செயற்படவும் வேண்டும்.

(ஆ) இவ்வாலயம் சம்பந்தப்பட்ட நிதி தொடர்பான வகையில், அசையும் அசையாச் சொத் துக்கள் விடயத்தில் அல்லது வேறு ஏதேனும் விடயத்தில் செயலாளர் மீது சந்தேகம் ஏற்பட்டாலோ,நேர்மையற்றவர் என அல்லது சபையின் நோக்கங்களுக்கு விரோத மாக செயற்படுகிறார் என நம்பினால் அத்தகைய குற்றச்சாட்டை சுமத்துபவர் உட்பட ஐந்து உறுப்பினர்கள் விசேட பொதுச்சபைக்கூட்டத்தை கூட்டுமாறு எழுத்து மூலம் குற்றச்சாட்டுக்களையும் காரணங்களையும் குறிப்பிட்டு தலைவரைக் கோர லாம் என் பதுடன் இப்பிரமாணத்தின் பின்வரும் பிரமாணங்களில் குறித்துரைக்கப் பட்டதன்படி பொதுச்சபை செயற்படவும் வேண்டும்.

(இ) இவ்வாலயம் சம்பந்தப்பட்ட நிதி தொடர்பான வகையில், அசையும் அசையாச் சொத் துக்கள் விடயத்தில் அல்லது வேறு ஏதேனும் விடயத்தில் முழு நிர்வாக சபை உறுப் பினர்களும் சபையின் நோக்கங்களுக்கு விரோதமாக செயற்படுகிறார்கள் என எவ ரேனும் நம்பினால் நம்பிக்கைப் பொறுப்பு சட்டத்தின் 102ம் பிரிவின் கீழ் நட வடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ) பிரமாணம் 5 (ii) (அ) (ஆ) இன் கீழ் இனம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பில் விளக் கம் கோரவும் சுதந்திரமான விசாரணையாளர்கள் மூலம் விசாரணை செய்யவும் பொதுச் சபை வேண்டும் என்பதுடன் விசாரணையாளர்கள் குழு தமது முடிவினை பொதுச் சபைக்கு விசாரணைக்குழு நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து அறுபது நாட் களுக்குள் எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும் எனவும் தேவைப்படுத்தப்படுகின்றது.

(உ) இவ் ஆலயம் சம்பந்தப்பட்ட நிதி, அசையும் அசையா சொத்துக்கள் தொடர்பான வகை யில், நிர்வாக சபையைச்சேர்ந்த தலைவர், உபதலைவர், செயலாளர், உதவிச் செய லாளர், பொருளாளர் உட்பட்ட உறுப்பினர்கள் ஒருவரின் நடத்தை நேர்மை யற்றது எனவும் அல்லது சபையின் நோக்கங்களுக்கும், பிரமாணங்களுக்கும் விரோதமானது எனவும் சுதந்திரமான விசாரணைக்குழு அறிக்கையினை பிரமாணம் (5)(ii) (ஈ) இன்படி பொதுச்சபைக்கு சமர்ப்பித்தால், குற்றம் நிரூபிக்கப்பட்டால் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் அவ்வுறுப்பினரை அவர் வகித்த பதவிகளில் இருந்தும், ஆலய பரிபாலனசபையில் இருந்தும் நீக்கலாம். இப்பிர மாணத்தின்படி விலக்கப்பட்ட உறுப்பினருக்கு எழுத்து மூலம் பொதுச்சபை கூட்டத் தீர்மானத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று செயலாளரினால் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய பதவி நீக்கும் தீர்மானம் செயலாளருக்கு எதிராக எடுக்கப் பட்டால் பொதுச்சபை கூட்டத்தீர்மானத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று தலை வரினால் அனுப்பப்படல் வேண்டும்.

(ஊ) மேலே குறிப்பிட்ட 5 (ii) (அ) (ஆ) தொடர்பான குற்றங்கள் எது தொடர்பிலும் குற்ற வாளியாக பொதுச்சபை தீர்மானித்து பதவி விலக்கப்பட்டவருக்கு எதிராக வழக் கொன்று ஆலய பரிபாலனசபையின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டால் வழக்குத்தாக் கல் செய்யப்பட்ட நாளில் இருந்து அந்த உறுப்பினர் தமது உறுப்பினர் பதவியில் இருந்து இயல்பாகவே இடைநிறுத்தி வைக்கப்பட்டவராவார். நீதிமன்ற வழக்கில் அவர் குற்றமற்றவர் என்று தெளிவாக தீர்மானிக்கப்பட்டு தீர்ப்பு வழுங்கப்படின் அவர் மீளவும் ஆலய பரிபாலனசபை உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்படலாம்.

## 06. பொதுச்சபைக்கூட்டம்

வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் ஒவ்வொரு வருடமும் ஆலய மகோற்சவகாலம் முடிவடைந்த பின்வரும் ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படுதல் வேண்டும்.

## 07. விசேட பொதுச்சபைக்கூட்டம்:

(i) (அ) நிர்வாக சபையின் தீர்மானத்தின் பேரில் அல்லது,

(ஆ) ஆலய பரிபாலனசபையின் ஐந்து உறுப்பினர்கள் விசேட பொதுச்சபைக்கூட்டத்தின் அவசியத்தினை விளக்கி எழுத்து மூலம் செயலாளருக்கு விண்ணப்பிப்பதன் பேரில் விசேட பொதுச்சபைக்கூட்டம் கூட்டப்படலாம்.

(ii) பதின்நான்கு நாட்களுக்கு குறையாத எழுத்துமூல முன்னறிவித்தல் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட பின்னரே விசேட பொதுச்சபைக்கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

(iii) விசேட பொதுச்சபைக்கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மட்டுமே பரிசீலனை செய்யப்படலாம்.

## 08. நிறைவெண் (கோரம்)

நடப்பு ஆண்டிற்குரிய உறுப்புரிமை உடையவர்களும், ஆயுட்கால உறுப்புரிமை உடையவர்களும் பொதுச்சபைக்கூட்டம் அல்லது விசேட பொதுச்சபைக்கூட்டத்தில் பங்குபற்றலாம் என்பதுடன் பொதுச்சபைக்கூட்டம், விசேடபொதுச்சபைக்கூட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு குறைந்தது உறுப்புரிமையுடைய இருபத்தைந்து பேர் சமூகமளித்தல் கட்டாயமாவதுடன் நிறைவெண் கொண்டிராத எக்கூட்டமும் வலுவற்றதாகிறது. இப்பிரிவின் நோக்கத்திற்காக சந்தாப்பணம் நிலுவை இன்றிச் செலுத்தியோரே அங்கத்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்பதுடன் அத்தகைய உறுப்பினர் இடாப்பு நிர்வாகசபையின் பொருளாளர் அல்லாத தலைவர் உட்பட்ட இருவரால் பரிசீலிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

## 09. பொதுச்சபைக்கூட்ட அறிவித்தல்

(i) வருடாந்த பொதுச்சபைக்கூட்ட அறிவித்தலானது கூட்டத்திகதிக்கு இருபத்து ஒரு நாட்களுக்கு முன்பாக அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) எந்தவொரு பொதுச்சபைக் கூட்ட அறிவித்தலும்

(அ) கூட்டம் நடைபெறும் இடம், காலம், நேரத்தினையும் ;

(ஆ) கூட்ட நிகழ்ச்சி நிரலையும்;

(இ) வருடாந்த செயலாளர் அறிக்கையினையும் ;

(ஈ) கணக்காய்வாளர் அறிக்கையினையும்;

(உ) புதிய பிரேரணைகள் குறித்த குறிப்புக்களையும் கொண்டிருத்தல் வேண்டும் .

(iii) எந்தவொரு பொதுச்சபைக்கூட்டத்திற்கும் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் ஒழுங்கில் நிகழ்ச்சிகள் அமைய வேண்டும்.

01. கடவுள் வணக்கம்
02. தலைவர் தலைமையுரை
03. செயலாளார் அறிக்கை
04. கணக்கு அறிக்கை

05. கணக்குப் பரிசோதகர் அறிக்கை

06. கடிதங்கள், விண்ணப்பங்கள்

07. புதிய நிர்வாக சபைத்தெரிவு பிரேரணைகள்

08. புதிய தலைவர் உரை

09. வேறு விடயங்கள்

## 10. கூட்ட ஒழுங்குகள்

(i) எல்லாக் கூட்டங்களுக்கும் தலைவர் தலைமை வகிப்பார். தலைவர் பிரசன்னமாக இருக்காது விடின் உபதலைவர் தலைமை வகிப்பார். இருவரும் பிரசன்னமாயிருக்காது விடின் வயதில் மூத்த நடப்பு நிர்வாக சபையின் உறுப்பினர் ஒருவரைத் தற்காலி கமாகத் தலைமை வகிக்கும்படி பிரேரணை மூலம் தெரிவு செய்தல் வேண்டும்.

(ii) கூட்டங்களில் அமைதியையும், ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் பேச்சிலும்,செயலிலும் தலைவர் நிலைநாட்ட வேண்டும்.

(iii) ஒரே நேரத்தில் ஒரு உறுப்பினர் மாத்திரம் பேசுவதற்கு அனுமதிக்கப்படுவார். உறுப்பினர்கள் தங்கள் பேச்சைத் தலைவரை நோக்கி நிகழ்த்துவதுடன், கூடிய வரையில் தெளிவாக வும், சுருக்கமாகவும் பேசவேண்டும் என்பதுடன் எடுத்துக்கொண்ட விடயத்தை மையப் படுத்தியும் உரையை நிகழ்த்த வேண்டும்.

(iv) கூட்ட ஒழுங்குகள் பற்றிய விடயத்தில் தலைவரின் கருத்தே முடிவானதாகும்.

## 11. கூட்ட அறிக்கை

(i) உறுப்பினர் எவருக்கும் கூட்ட அறிக்கையைப் பார்வையிட உரிமையுண்டு. அவ்வாறு பார்வையிட விரும்பும் உறுப்பினர்கள், கூட்ட அறிக்கை அல்லது அறிக்கைகளைக் குறிப்பிட்டு செயலாளருக்கு எழுத்துமூலம் விண்ணப்பிப்பதன் மூலம் பார்வையிடலாம். செயலாளரின் முன்னிலையிலேயே கூட்ட அறிக்கை பார்வையிடப்பட வேண்டும்.

(ii) பொதுச்சபைக்கூட்டத்தின் அறிக்கை, பொதுச்சபைக்கூட்டத்தை அடுத்துவரும் நிர்வாக சபைக்கூட்டத்தில் செயலாளரால் வாசித்து நிறைவேற்றப்படல் வேண்டும் .

## 12. பிரேரணைகள், கடிதங்கள், விண்ணப்பங்கள்

(i) தாம் விரும்பும் பிரேரணைகள் எதையும் உறுப்பினர்கள் முன்மொழிபவரின், வழிமொழிப வரின் கையொப்பங்களுடன் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் புதி தாகச் சேர்க்கும் அல்லது ஆக்கும் பிரேரணைகள் பிரமாணம் 13 (i) இற்கு அமைவாக நிறைவேற்றப்படல் வேண்டும். பிரேரணைகளும், கடிதங்களும் விண்ணப்பங்களும் நிர் வாகசபைக்கு அல்லது பொதுச்சபைக்கு என பெயர் குறித்து எழுத்து மூலம் செயலாள ருக்கு அனுப்பப்படல் வேண்டும. அவ்வாறு அனுப்பப்படும் கடிதங்கள், பிரேரணைகள், விண் ணப்பங்கள் முதலியன பொதுச்சபைகூட்டத்தில் ஆராயப்படும் பட்சத்தில் பதில் அனுப் பத் தேவையில்லை. ஆனால் நிர்வாக சபைக்கு என பெயர் குறித்து அனுப்பப்படும் கடிதங் கள், விண்ணப்பங்கள் அவை கிடைத்த நாளின்பின் உடனடியாக அடுத்து வரும் நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு உரிய பதில் எழுத்து மூலம் குறித்த கூட்டத் திகதியில் இருந்து பதின்நான்கு நாட்களுக்குள் அனுப்பப்படல் வேண்டும்.

(ii) பிரமாணங்களைத் திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு புதிய பிரமாணங்களை ஆக்குவதற்கு என உறுப்பினர்களுக்கு முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக அத் தகைய முன்மொழிவுகளை வரவேற்கும் முன்னறிவித்தல் பத்திரிகைகள் மூலம் பொதுச் சபை கூட்டத்திகதிக்கு முன்னதாக 45 நாட்களுக்கு குறையாத கால அவகாசம் வழங்கப் பட்டு செயலாளரால் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் பொதுச் சபைக்கூட்டத் திகதியினையும் இடத்தினையும் வெளிப்படுத்தி நிற்றல் வேண்டும். இப்பிர மாணத்தின் கீழ்க்கொண்டுவரப்படும் பிரேரணைகள் பொதுக்கூட்டத்திற்கு முப்பது நாட் களுக்கு முன்பு செயலாளருக்கு கிடைக்ககூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## 13. பிரமாணங்கள்

(i) நடைமுறையில் இருக்கும் பிரமாணங்களை திருத்த அல்லது நீக்க அல்லது புதிய பிரமாணங்களை ஆக்குவதற்கு பொதுச்சபைக்கு அதிகாரமுண்டு. ஒரு பிரமா ணத்தை அல்லது பிரமாணங்களைத் திருத்த அல்லது நீக்க அல்லது புதியவற்றையாக்க பொதுச்சபைக்கூட்டத்தில் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களில் நூற்றுக்கு எழுபத் தைந்து சதவீதத்தினர் ஒப்புதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபத்தைந்திற்கும் மேலானதாக இருத்தல் வேண்டும். 12 (ii) வது பிரமாணத்தின்படி முன்னறிவித்தல் கொடுத்துப்பெற்ற திருத்தம் அல்லது நீக்கம் அல்லது ஆக்கம் மாத்திரமே பொதுச்சபைக்கூட்டத்தில் ஆராயப்படல் வேண்டும்.

(ii) நடைமுறையிலிருக்கும் பிரமாணங்கள் பத்து வருடங்களுக்கு ஒரு முறை பொதுச் சபை யால் நியமிக்கப்படும் ஏழுபேர் கொண்ட குழுவொன்றினால் மீளாய்வு செய்யப் படுதல் வேண்டும்.

## 14. பொதுச்சபைக்கூட்டத்தில் நிகழ்த்தப்படக்கூடிய விடயங்கள்

(i) தலைவர், உபதலைவர், செயலாளர், உதவிச்செயலாளர், பொருளாளர் உட்பட ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்களையும் ஒரு கணக்கு ஆய்வாளரையும் கையிருப்புச்செவ்வை பார்க்கும் குழுவொன்றையும் தெரிதல், அல்லது நீக்குதல் ;

(ii) வருடாந்தக் கணக்குகளையும் ஐந்தொகையையும், கணக்குஆய்வாளரின் அறிக்கை யையும், கையிருப்புச் செவ்வை பார்க்கும் குழுவினரின் அறிக்கையையும், பரிசீலனை செய்து அங்கீகரித்தல் ;

(iii) உறுப்பினர்களைத் தெரிதல், நீக்குதல் அல்லது நிறுத்துதல் ஆகியவற்றை உறுதிப் படுத்தல் ;

(iv) நடைமுறையில் இருக்கும் பிரமாணங்களை திருத்துதல், நீக்குதல் அல்லது புதிய பிர மாணங்களை ஆக்குதல் ;

(v) கோவில் பரிபாலனம், சமய முன்னேற்றம், அறப்பணி, ஆக்க வேலை, சமூகப்பணி சம் பந்தமாக உறுப்பினர்களின் பிரேரணைகள் கடிதங்களைப் பரிசீலித்து பிரயோசனமான வற்றை அங்கீகரித்தல் ;

(vi) ஆலயத்தின் வளர்ச்சிக்கும் இந்துக்களின் மறுமலர்ச்சிக்கும் சமூக, அறநெறிப்பணிக் குமான புதிய திட்டங்களை வகுத்தலும் அமுல்படுத்தலும் ;

(vii) இக்கோவையின் ஏதேனும் பிரமாணம் குறித்துரைக்கும் வேறுபணிகளை ஆற்றுதல்;

## 15. நிர்வாகசபை

**(i)** (அ) நிர்வாகசபையில் மொத்தம் ஒன்பது பேர் பதவி வகிப்பர்.

(ஆ) பொதுச்சபை உறுப்பினராக தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு குறையாத காலம் அங்கத்துவம் வகித்து வருபவரும் முப்பது வயதிற்கு மேற்பட்டவருமான அங்கத்தவர் மட்டுமே தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு தெரிவுசெய்யப் படுவதற்கு தகைமையுடையவராவார்.

(இ) நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் நிர்வாக சபைக்கூட்டங்களுக்கு தவறாது சமூகமளிக்க கூடியவர்களாகவும் கோவில் முக்கிய வைபவங்களில் முன்னின்று தொண்டாற்றும் மனப்பாங்கு உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற பதவிகளை வகிப்பவர்கள் புலோலியில் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

(உ) நிர்வாகசபைக்கு இலங்கைத்தீவினுள் வசிப்பவர்கள் மட்டுமே தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

**(ii)** (அ) நிர்வாகசபையின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். மூன்று ஆண்டுகள் முடிவதற்கு ஒருமாத காலத்திற்கு முன்னதாகவே புதிய நிர்வாகசபை உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

(ஆ) பிரமாணம் 6 இன் கீழானநடவடிக்கையை கருத்திற்கொண்டு புதிய நிர்வாகசபை அப் பொதுச்சபைக் கூட்டத்திலிந்து ஒருமாதத்திற்குள் பதவி ஏற்றல் வேண்டும்.

(இ) பொதுச்சபைக்கூட்டத்தில் அல்லது விசேட பொதுச்சபைக்கூட்டத்தில் நிர்வாகசபை தெரிவு செய்யப்படும்.

**(iii)** (அ) தவிர்க்க முடியாத காரணங்களினால் மூன்று வருட முடிவில் புதிய நிர்வாகசபையொன்று தெரிவுசெய்யப்படவியலாத பட்சத்தில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்படும் வரை நடப்பு வருட நிர்வாகசபை தொடர்ந்தும் கடமையாற்றும்.

(ஆ) மேலே 15 (iii) (அ) இல் குறிப்பிடப்பட்ட இயலாமையானது சாதாரண நடவடிக்கையின் போது பதவியில் உள்ள நிர்வாகசபையின் சக்திக்கப்பாற்பட்ட காரணிகளால் உருவானதாகவும் அது நேர்மையற்ற நோக்கத்தினையும், எண்ணத்தினையும் கொண்டிராததாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய இயலாமையை நீக்க பதவியிலுள்ள நிர்வாகசபை அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய இயலாமை குறித்து உதவி அரசாங்க அதிபருக்குப்பிரதியிட்டு அரசாங்க அதிபருக்கு அறிவித்தல் வேண்டும்.

**16. (i)** இவ்வாலயத்தின் பிரதமகுருக்கள் ஆலய பரிபாலனசபையின் போஷகராக இருப்பார்.

**(ii)** (அ) நிர்வாகசபை உறுப்பினர்கள் .

01. தலைவர்
02. உபதலைவர்
03. செயலாளர்

04. உதவிச்செயலாளர்

05. பொருளாளர்

மேற்கூறிய பதவிகளை வகிப்போருடன் மேலும் நான்கு பேர் நிர்வாகசபை உறுப்பினர் களாக தெரிவு செய்யப்படுவர்.

(ஆ) நிர்வாகசபை உறுப்பினர்கள் ஒன்பது பேரும் ஆலயத்தின் நம்பிக்கைப் பொறுப் பாளர்களாக அவர்களது பதவிக்காலத்தில் கடமை புரிவதுடன் இச்சபையின் பிரமாணங்களின் கீழும் நம்பிக்கை பொறுப்புச்சட்டத்தின் பிரமாணங்களின் கீழும் இச்சபையின் நோக்கங்கட்காக பணியாற்றுதல் வேண்டும்.

(இ) தலைவர், செயலாளர், பொருளாளர் அல்லது நிர்வாக சபை உறுப்பினர் பதவி வகிப் போர் தாமாகவே விலகிக் கொண்டாலோ, அல்லது பிரமாணம் 5 இன்படி அங்கத்துவ உரிமையை இழந்தாலோ இடை நிறுத்தப்பட்டாலோ அவர்கள் தொடர்ந்து பதவியில் இருக்கும் உரிமையை இழப்பர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அடுத்துவரும் பொதுச்சபைக்கூட்டத்திலோ அல்லது விசேட பொதுச்சபைக்கூட்டத்திலோ புதிய தெரிவு இடம்பெறல் வேண்டும். இதற்கிடைப்பட்ட காலத்தில் ஏனைய நிர்வாகசபை உறுப் பினர்கள் பதவி இழந்தவருக்குப் பதிலாக ஒருவரை நியமித்துக் கொள்ளலாம். எனினும் மூன்று மாத காலத்தினுள் விசேட பொதுச்சபைக்கூட்டம் கூட்டப்பெற்று அவ் வெற்றிடத்திற்கு புதியவர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(ஈ) தெரிவு செய்யப்படும் நிர்வாகசபையானது தெரிவு செய்யப்பட்ட தினத்தில் இருந்து தாமாக விலகிக் கொண்டால், விலகிக்கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் அடுத்த நிர்வாகசபை தெரிவு செய்யப்படும் வரை தற்காலிகமாக கடமையாற்றுவர் என் பதுடன் புதிய நிர்வாகத்திடம்பொறுப்புகளை கையளிக்கவும் தாமதமின்றி செயற் படுதல் வேண்டும், என்பதுடன் இது குறித்து உதவி அரசாங்க அதிபருக்கு பிரதியிட்டு அரசாங்க அதிபருக்கு அறிவித்தல் வேண்டும். பிரமாணம் 5 (ii) (இ) இன்கீழ் எடுக் கப்படும் எந்த நடவடிக்கையின் போதும் இப்பிரமாணம் வலுவற்றதாகுதல் வேண் டும்.

(உ) நிர்வாகசபை உறுப்பினர்களில் எவருக்கும் மாறாத மனநோய் இருப்பதாக மருத்து வச்சான்றுகள் அடிப்படையில் நிர்வாகசபை தீர்மானித்தால் அவர் பதவியை இழப் பார். இத்தீர்மானம் அடுத்துவரும் பொதுச்சபைக்கூட்டத்தில் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஊ) எழுத்து மூலம் தகுந்த காரணம் காட்டாது தொடர்ந்து மூன்று மாதாந்த நிர்வாக சபைக்கூட்டங்களுக்கு சமூகமளிக்கத் தவறிய ஒருவரின் பெயர் நிர்வாகசபைக்கு செயலாளரால் அறிவிக்கப்பட்டு உறுப்புரிமையை இழந்து விட்டாரென தீர்மானம் இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுபதிவு தபால் மூலம் அவருக்கு செய லாளரால் அனுப்பப்படல் வேண்டும்.

(எ) மேற்படி, (உ), (ஊ) பிரிவின்படி ஏற்படும் வெற்றிடங்களை இப்பிரமாணத்தின் பிரிவு (இ) இற்கு அமைய நிர்வாக சபை நிரப்பலாம். இவ்வாறான நிரப்புதல் நடவடிக் கையை ஒரு நிர்வாகசபை தனது பதவிக்காலத்தில் ஐந்து தடவைக்கு மேல் மேற் கொள்ளல் ஆகாது.

(ஏ) நிர்வாகசபை உறுப்பினர்கள் பதவிக்காலத்தில் கடமையினைநிறைவேற்றுதல் நிமித் தம் எந்தவிதமான ஊதியத்தினையோ, இலாபத்தினையோ, வருமானத்தினையோ பெறுவதற்கு உரித்துடையவர்கள் அல்லர்.

(ஐ) தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இரண்டு தொடர்ச்சியான பதவிக் காலத்தினை வகிப்பதற்கு முடியும் என்பதுடன் மூன்றாவது தொடர்ச்சியான பதவிக்காக போட்டியிடுவதில் இருந்து தடுக்கப்படுகிறார்கள் என்பதுடன் இடை விட்ட முறிக்கப்பட்ட மூன்று ஆண்டு கால இடைவெளியின் பின் மீண்டும் குறித்த பத விக்கு போட்டியிடவோ தெரிவு செய்யப்படவோ முடியும்.

## 17. நிர்வாகசபையினின்றும் விலகுதல்

(i) நிர்வாக சபையினின்றும் சுயமாக விலக விரும்பும் உறுப்பினர் எவரும் எழுத்துமூலம் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ii) பதவியினின்றும் விலகுபவர் அல்லது விலக்கப்படுபவர் தம் வசமுள்ள கோவிலுக்குரிய நிதியையும், அசையும் அசையா சொத்துக்களையும், மற்றும் புத்தகங்கள் குறிப்புகள் முதலியவற்றையும் 48 மணித்தியாலங்களுக்குள் செயலாளர் அல்லது அதிகாரம் அளிக் கப்பட்ட நிர்வாகசபையின் இரு தகுதி வாய்ந்த பதவி வகிப்பவர்களிடம் ஒப்படைத்து ஒப்புச்சான்றுதல் பெற வேண்டும்.

(iii) பதவியினின்று விலகுதல் சம்மந்தமான விடயங்கள் உடனுக்குடன் செயலாளரால் நிர் வாகசபையின் கவனத்திற்கு கொண்டுவரப்படவேண்டும்.

## 18. நிர்வாகசபை கூடுதல்

(i) தேவையானபோது செயலாளரால் நிர்வாகசபை கூட்டப்பட வேண்டும். ஒன்பது நிர் வாகசபை உறுப்பினர்களில் குறைந்தது ஐந்துபேர் கூட்டமொன்றிற்கு சமூகளித்திருக்க வேண்டும்.

(ii) ஆலய விடயங்களைத் திறம்பட நடாத்துவதற்காக மாதமொருமுறையேனும் நிர்வாக சபை கூட்டப்படல் வேண்டும்.

(iii) நிர்வாகசபைக்கூட்ட அறிவித்தல் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் உறுப்பினர் களுக்கு எழுத்து மூலம் கொடுக்கப்படல் வேண்டும். விசேட நிர்வாகசபைக் கூட்டங்கள் குறைந் தது மூன்றுநாள் முன்னறிவித்தலுடன் கூட்டப்படலாம்.

(iv) நிர்வாகசபையில் தீர்மானிக்கப்படும் விடயங்கள் சமூகமளித்த பெரும்பான்மையினரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

(v) நிர்வாகசபை கூட்டத்தின் போது தீர்மானம் ஒன்றின் மீதான வாக்கெடுப்பில் தலைவரும் தனது வாக்கினை செலுத்தலாம்.

## 19. நிர்வாகசபையின் கடமைகளும், அதிகாரங்களும்

(i) ஆலயத்தின் பரிபாலத்தினை சிறப்புற நடாத்துதல் .

(ii) எவ்விடயங்களையும் சபையின் பிரமாணங்களுக்கமைய நடாத்துதல்.

(iii) செலவுகளை பரிசோதித்து அனுமதித்தல், சபைக்குரிய புத்தகங்கள், குறிப்புகள், பேரேடு கள் முதலியவற்றை முறையாக வைத்திருக்கப்படுவதை உறுதிப்படுத்தல் .

(iv) கணக்கு ஆய்வாளரின் குறிப்புக்களைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல்.

(v) பொதுச்சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் விடயங்களை நிறைவேற்றல். பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படாத ஏதாவது விடயம் மிக அவசரமாக செய்ய வேண்டியேற்பட்டால் நிர்வாகசபையின் ஏகமனதான முடிவுடன், பொதுச்சபையின் அங்கீகாரத்தை எதிர்பார்த்துச் செய்யலாம்.

(vi) ஆலயம் தொடர்பான வைபவங்களை சகல உறுப்பினர்களும் முன்னின்று செவ்வனே நடாத்துதல்.

(vii) கோவிலின் புனிதத் தன்மைக்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்படாத வண்ணம்பார்த்துக் கொள்ளல்.

(viii) ஆலய பரிபாலனசபை நடாத்தும் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்கள், கொள்வனவு விற்பனைகள், ஒப்பந்தங்கள் நிறைவேற்றுதல்களின் போதும் தலைவருடன், செயலாளர் அல்லது பொருளாளர் அல்லது நிர்வாகசபையினால் விசேட அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவர் முன்பாக இலச்சினை இடப்பட்டு இருவரும் ஒப்பம் இட்டே ஆவணங்கள் நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதுடன் விசேட சந்தர்ப்பங்களில் நிர்வாகசபை விசேட அதிகாரம் அளித்த மேற் குறித்த திறத்தினர் எவர் இருவரும் மேற்குறித்தவாறு நிறைவேற்றுகையை மேற்கொள்ளலாம். வேறு எந்த முறையிலான நிறைவேற்றுகைகளும் ஆலய பரிபாலனசபையின் நிறைவேற்றுகையாகக் கருதப்படுதல் கூடாது என்பதுடன் வலுவிழந்தும் போதல் வேண்டும்.

(ix) ஆலயபரிபாலனசபை கையாளும் ஆலயத்திற்குரிய வங்கிக் கணக்குகள், நிதிப் பரிமாறல்கள், சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் எதிலும் தலைவர் பொருளாளர் ஆகிய இருவரும் இணைந்து கையெழுத்து இடுதல் வேண்டும் என்பதுடன் தலைவர் இல்லாத பட்சத்தில் செயலாளர் தலைவரின் எழுத்து மூல அனுமதியுடன் கையொப்பம் இடலாம்.

(x) பொதுச்சபைக்கூட்டமொன்றில் அங்கீகரிக்கப்பெற்ற தீர்மானங்களெதனையும் மாற்ற அல்லது நீக்க அல்லது திருத்த நிர்வாகசபைக்கு அதிகாரமில்லை.

(xi) இந்துசமய அறநெறி, ஆன்மீக, சமூகப்பணிகளை திட்டமிடுதலும் செயற்படுத்தலும்.

(xii) ஆலயபரிபாலனசபையின் இலக்குகளை அடையவும் இக்கோவையின் பிரமாணம் 2 இல் விரித்துரைக்கப்பட்ட இலக்கை அடையவும் பணியாற்றுதல்.

(xiii) இக்கோவையின் ஏனைய பிரமாணங்களில் விரித்துரைக்கப்பட்ட ஏனைய கடமைகளை புரிதலும் அதிகாரத்தினை பயன்படுத்தலும்.

## 20. தலைவரின் கடமைகள்

(i) தலைவரே சபையின் பிரதம நிறைவேற்றுஅதிகாரி என்பதுடன் அனைத்து ரீதியிலும் நிர்வாகசபையினருடனும், பொதுச்சபையினருடனும் இணைந்து இவ்வாலயத்தினை, இந்துசமய அறப்பணிகளை, சமூகப்பணிகளை முன்எடுத்துச் செல்லவேண்டும்.

(ii) தலைவர் இல்லாத சந்தர்ப்பத்தில் உபதலைவர், தலைவரின் கடமைகளை ஆற்றுவதற்கு தகுதியுடையவராவார்.

(iii) தலைவர் பொதுச்சபைக் கூட்டங்களுக்கும், விசேட பொதுச்சபைக் கூட்டங்களுக்கும், நிர் வாகசபைக் கூட் டங்களுக்கும் தலைமைதாங்கி பிரமாணங்களுக்கு அமைய கூட்டத்தை நடாத்துதல் வேண்டும்.

## 21. செயலாளரின் கடமைகள்

(i) ஆலயபரிபாலனசபைக்குரிய புத்தகங்கள், குறிப்புகள், பத்திரங்கள், கடிதக்கோவைகள், முதலியவற்றை ஒழுங்காக வைத்திருத்தல்.

(ii) ஆலயபரிபாலனசபைக்காக கையொப்பமிட்டு கடிதப்போக்குவரத்துச் செய்தல்.

(iii) கூட்டஅறிக்கைகளை எழுதி நிர்வாகசபையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.

(iv) தேவையான பொழுது நிர்வாகசபைக்கூட்டத்தையோ விசேடநிர்வாக சபைக்கூட்டத் தையோ, பொதுச்சபைக்கூட்டத்தையோ கூட்டுவதற்கானஒழுங்குகளைச் செய்தலும் நடவடிக்கை எடுத்தலும்.

(v) ஆலயம் தொடர்பாக கிடைக்கப்பெறும் கடிதங்களை அடுத்துவரும் நிர்வாக சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்து நிர்வாகசபையின் தீர்மானத்தை உரியவருக்கு எழுத்துமூலம் அறிவித்தல்.

(vi) இக்கோவையின்படி பிரமாணம் 5 இல் விரித்துரைக்கப்பட்ட பணிகளைப்புரிதலும் நட வடிக்கை எடுத்தலும்.

(vii) ஆலய பரிபாலன சபையின் சாதாரண நடவடிக்கையின்போது செயலாளருக்கு என இருக்கக்கூடிய அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தும் கடமை அளிக்கப்பட் டுள்ளது.

## 22. பொருளாளரின் கடமை

(i) ஆலயத்திற்குரிய நிதியை வங்கியில் அல்லது வேறு தகுந்த முறையில் நிர்வாக சபை யின் தீர்மானத்திற்கு இணங்கசபையின் பெயரில் பத்திரப்படுத்தி வைத்திருத்தல் வேண் டும். பொருளாளர் தன்னுடைய கையிருப்பில் உள்ள நிதியை இழந்தால் அவரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

(ii) ஆலயத்தின் அசையும் அசையாச் சொத்துக்களை இனம் காணுதலும், மீட்டலும், கட் டுப்படுத்தலும், பேணுதலும், உரிமையைப்பெற்றுக் கொள்ளுதலும் என்பதுடன் அதனை பட்டியல்படுத்தி வெளிப்படுத்துதல் வேண்டும்.

(iii) இவ்வாலயத்தின் அசையும் அசையாச்சொத்துக்களை பேணிப்பாதுகாத்தல் வேண்டும். கோவிலுக்குரிய அசைவற்ற ஆதனங்களின் உறுதிகள் அல்லது அவைசம்பந்தமான பத்திரங்களின் பிரதிகளை ஒழுங்காக வைத்திருத்தல்.

(iv) கணக்கு ஆய்வாளர் தேவைப்படுத்தும் நேரத்தில் கையிருப்பு நிதியைக் காண்பிப்பது டன் கணக்குப்புத்தகங்கள் பேரேடுகள் முதலியவற்றை பார்வையிட அனுமதித்தல்.

(v) ஒவ்வொரு நிர்வாகசபைக்கூட்டத்தின்போதும் மாதாந்த வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்தல்.

(vi) பொதுச்சபைக்கூட்டத்தில் அல்லது நிர்வாக சபைக்கூட்டத்தில் அனுமதிக்கப்பட்ட வேலைகளை அவதானித்து அதற்குரிய கொடுப்பனவை உரியவர்களிடம் கொடுத்து பற்றுச்சீட்டைப் பெற்று உரிய கணக்குப்பதிவேட்டில் பதிவு செய்தல்.

(vii) வருடாந்த வரவு செலவுக் கணக்கறிக்கையைத் தயாரித்து சகல உறுப்பினர்களின் பார்வைக்காக அனுப்புதல்.

(viii) எல்லா வகையான வரவு செலவுகளையும் உரிய பதிவேடுகளில் பதிந்து வைத்தல்.

(ix) திருப்பணி உண்டியலில் சேரும் நிதியை கிரமமாக எடுத்து கணக்குப் பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன் நிர்வாகசபை உறுப்பினர் இருவர் முன்னிலையில் உண்டியல் திறக்கப்பெற்று உண்டியலிலிருந்து பெறப்பட்ட தொகை பின்னிணைப்பு படிவத்தில் பதியப்பெற்று மூவராலும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(x) இக்கோவையின் பிரமாணம் 3 (iii) இன்படி உறுப்பினர்களிடம் இருந்து சந்தாப்பணம் வசூல் செய்து பற்றுசீட்டு வழங்கி கணக்கு பதிவு செய்தல்.

(xi) இப்பிரமாணங்களிடங்காத நிதி அசையும் அசையாச் சொத்துக்கள் சம்பந்தமான விடயங்களில் நிர்வாகசபைத் தீர்மானங்களுக்கு அமைவாக செயல்படுதல் வேண்டும்.

## 23. கடமைகளைக் கையளித்தல்

இப்பிரமாணங்களின்படி தமக்கென ஒதுக்கப்பட்ட கடமைகளை நிர்வாகசபையின் அனுமதியின்றி எக்காரணம் கொண்டும் வேறொருவருக்கு கையளிப்பதற்குப் பதவிவகிப்பவரெவருக்கும் உரிமையில்லை.

## 24. உபகுழுக்கள் மற்றும் இணைப்பாளர்கள் நியமனம்

(i) (அ) நிர்வாகசபையானது அவ்வப்போது அதனது பணிகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு பொதுச்சபையின் உறுப்பினர்களினை இணைத்து நிர்வாகசபை உறுப்பினர் ஒருவர்தலைமையில் உபகுழுக்களைநியமிக்கலாம்என்பதுடன்அத்தகைய உபகுழுவொன்றின் உறுப்பினர் தொகை ஐந்தினை விட அதிகமாகாமலும் மூன்றினைவிடக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) உபகுழுக்கட்கு அவற்றின்பணி குறித்துரைக்கப்படவேண்டும் என்பதுடன் அவ் உப குழுவின் பணிக்காலம் வரையறுக்கப்பட்டு வழங்கப்பட்டு அது தனது பணியினை குறித்த காலத்தில் முடிப்பது உறுதிப்படுத்தப்படுவதுடன்அவ்உபகுழு கலைக்கப்படவும் வேண்டும்.

(இ) உபகுழு உறுப்பினர் எவரும் ஊதியம் பெறவோ வேறு எந்த சலுகைகளைப்பெறவோ உரித்துடையவரல்லர் எனினும் அவர்களது பணிக்காலத்தில் பணிநிமித்தமான செலவுகளை நிர்வாகசபை வழங்கவும் வேண்டும்.

(ஈ) உபகுழுக்கள் நிர்வாகசபைக்கு பதிலிறுக்கும் கட்டுப்பாடுகொண்டவை என்பதுடன் நிர்வாகசபை கட்டளைகளுக்கு இணங்கிக்கொள்ளவும் வேண்டும் என்பதுடன்எந்த ஒரு மீறலும் உபகுழுவின் வலுவாந்தன்மையை அழித்துவிடும்.

(ii) (அ) இலங்கைக்குள்ளும், உலகளாவிய ரீதியிலும் பரந்துவாழும் புற்றளைச் சித்தி விநாய கர் அடியார்கள் இடையே இணைப்பினை ஏற்படுத்தவும் தொடர்புகளைப்பேணவும், கலாச்சாரப்பாலமாக ஆலயபரிபாலன சபை விளங்கவும் நிர்வாகசபை பெயர்குறிப்பிட்ட இணைப்பாளர்களை உலகளாவியரீதியில் நியமிக்கலாம்.

(ஆ) அத்தகைய இணைப்பாளர்கள் இக்கோவை பிரமாணங்கட்கும் நிர்வாகசபையின் கட்டளைக்கும் கட்டுப்பட்டவர்கள் என்பதுடன் தமது நடவடிக்கை குறித்து தேவைப் படுத்தப்படும் போது விளக்கமளிக்கவும் கடமைப்பட்டுள்ளனர்.

(இ) இவர்களது செயற்பாடுகட்கான ஒழுக்கக்கோவையை நிர்வாகசபை தயாரித்து அதன்படி ஒழுக தேவைபடுத்தவும், எந்தஒருமீறலும் அத்தகைய நபரினை குறித்த நியமனத் தில் இருந்து நீக்கவும் நிர்வாகசபைக்கு அதிகாரம் வழங்குகின்றது.

## 25. கணக்காய்வாளர்

(i) அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த உறுப்பினரொருவரையே கணக்காய்வாளராக பொதுச்சபை நியமிக்கவேண்டும். இக்கணக்காய்வாளர் தனது கணக்காய்வு அறிக் கையை பொதுச்சபைக்கூட்டத்திற்கு குறைந்தது இருமாதங்களுக்கு முன்பதாக தலைவரிடம் கையளிக்க வேண்டும். இவ் அறிக்கை பொதுக்கூட்டத்தில் ஆரா யப்படும்.

(ii) இப்பதவி வெற்றிடமாகும் பட்சத்தில் நிர்வாக சபையில் உள்ள ஒருவரை அவரின் இசை வுடன்நிர்வாகசபை கணக்காய்வாளராக பொதுச்சபை புதியவர் ஒரு வரை நியமிக்கும் வரை செயற்பட தெரிவு செய்தல் வேண்டும்.

## 26. புதிய நிர்வாகசபை தெரிவு

(i) பின்வரும் ஒழுங்கில் தெரிவுகள் இடம்பெறும்.

01. தலைவர் தெரிவு
02. செயலாளர்
03. பொருளாளர்
04. உபதலைவர்
05. உதவிச்செயலாளர்
06. நிர்வாகசபை உறுப்பினர்கள் நால்வர்

(ii) ஏதாவதொரு பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்டோர் போட்டியிடும் பட்சத்தில் குறித்த தெரிவு இரகசிய வாக்கெடுப்புமூலம் மட்டுமே நடைபெறும்.

(iii) இரகசிய வாக்கெடுப்புமூலம் நடைபெறும் தேர்தலை நடத்தும் தேர்தல் உத்தியோகத்தர் களாக தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் கடமையாற்றுவர். ஆனால் இம்மூவரில் ஒருவரே ஒரு போட்டி வேட்பாளராக இருப்பின் அவருக்குப் பதிலாக வேறொரு நிர்வாகசபை உறுப்பினரை தேர்தல் உத்தியோகத்தராக தெரிவு செய்ய வேண் டும்.

(iv) பொதுச்சபைக் கூட்டத்தின் ஆரம்பத்திலும் புதிய நிர்வாகசபை தெரியத்தொடங்கும் போதும் அன் றைய கூட்டத்தில் பங்குபற்றி வாக்களிக்கத்தகுதியுடைய அங்கத்துவர் பட்டியலை பொருளாளர் வாசிக்க வேண்டும். இப்பட்டியல் பிரமாணம் 8 இன்படி உதிப்படுத்தப்பட் டிருக்க வேண்டும்.

(v) இக்கோவையின் பிரமாணம் 3 இன் படி கூறப்பட்டுள்ள தகுதி பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்கத்தகுதியுடையோராவர்.

## 27. பிரதமகுருக்கள்

(i) ஆலயத்தின் பிரதமகுருக்களாக சோமாஸ்கந்தக் குருக்கள் ஜெயபாலசுந்தரக் குருக்கள் அவரது காலத்தில் விளங்குவார் என்பதுடன் அவர்வழிவந்த நல்லொழுக்கமும், தகுதியும் உடைய குருவாகத்தகுதியுடையவர் ஒருவர் தொடர்ந்தும் பிரதமகுருக்களாக அவரது காலத்தின்பின் இருக்கலாம்.

(ii) பிரதமகுருக்கள் தகுதி இழக்கும் பட்சத்திலோ, ஒழுங்கு தவறும் பட்சத்திலோ, பொதுச் சபையின் நம்பிக்கையை இழக்கும் பட்சத்திலோ பொதுச்சபை புதிய குருக்களை நியமிக்கலாம்.

(iii) இப்பிரமாணங்கள் அமுலாக்கப்படும் திகதியிலிருந்து பிரதமகுருக்களது வருமானம், சம்பளம், என்பன வெளிப்படுத்தப்பட்டு கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் நிர்வாகசபை தீர்மானம் எடுக்கும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) பிரதமகுருக்கள் ஆலயத்தின் பேரில் எந்த நிதியினையும், அசையும் அசையா சொத்துக்களையும் பெறவோ, பேணவோ, கட்டுப்பாட்டில் வைத்திருக்கவோ முடியாது என்பதுடன் அவை நிர்வாகசபைக்கு வெளிப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

(v) பிரதமகுருக்கட்கு அடியார்கள் வழங்கும் தட்சணைகளில் நிர்வாகசபை தலையிடவோ கணக்குநோக்கம் கருதி அறிக்கையிடக்கோரவோ அதிகாரம் அற்றதாகிறது.

## 28. நிர்வாகச்செயலாளரும் பரிபாலனஉத்தியோகத்தர்களும்

(i) நிர்வாகசபையானது புற்றளைச்சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபைக்கு எனஆலயத்தின் வளவில் காரியாலத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் காரியாலத்தினை மையமாகவைத்தே இச்சபை இயங்குதலும் வேண்டும்.

(ii) ஆலயபரிபாலனசபையின் நேர்த்தியான செயற்பாட்டினை உறுதிசெய்யவும், வேலைப் பழுவினை குறைக்கவும் காரியாலத்தினை தொடர்ச்சியாக இயக்கவும் நிர்வாகசபையானது நிர்வாகச்செயலாளரினையும், சபை தேவை எனக்கருதும் எண்ணிக்கையான உத்தியோகத்தர்களையும் பணிக்கு அமர்த்தலாம்.

(iii) நிர்வாகச்செயலாளரும், பணிக்கு அமர்த்தப்படும் உத்தியோகத்தர்களும் ஆலயபரிபாலன சபையின் ஊழியர்கள் என்பதுடன், ஊழியம்பெறவும் தகுதியுடையவர்கள் ஆவர்.

(iv) நிர்வாகச்செயலாளரும், பணிக்கு அமர்த்தப்படும் உத்தியோகத்தர்களும் நிர்வாகசபையினால் பெயர்குறித்துக் கொடுக்கப்படும் கடமைகளை ஆற்றுதல் வேண்டும் என்பதுடன் நிர்வாகசபைக்கு பொறுப்புச் சொல்லவும் விளக்கமளிக்கவும் கடமைப்பட்டவர்களாவர்.

( v ) நிர்வாகசபை நிர்வாகச்செயலாளரையும், பணிக்கு அமர்த்தப்படும் உத்தியோகத்தர்களையும் வழிப்படுத்தவும் ஒழுக்கக்கோவையினை வகுக்கவும் அதன்படி ஒழுகப்பணிக்கவும் வேண்டும் என்பதுடன் அவற்றின் பிரமாணங்களை மீறுபவர்களையும் சபையின் நோக்கத்தினை நிறைவேற்ற தடையாக இருப்பவர்களையும் இடைநிறுத்தவும், விசாரணைகளின் பின் பதவிவிலக்கவும் அதிகாரம் கொண்டதாகிறது.

## 29. ஆலயத்தின் அசையும் அசையாச்சொத்துக்கள்

(i) ஆலயத்தின் அசையும் அசையாச்சொத்துக்கள், நிதிவளங்கள், நகைகள், பாத்திரங்கள், பண்டங்கள், இயற்கைவளங்கள், விக்கிரங்கள், மணி, குடை, அனைத்தும் நிர்வாகசபையின் பொறுப்பில் இக் கோவையின் பிரமாணங்களின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

(ii) நிர்வாகசபையினரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் மட்டுமே ஆலயத்தின் பெயரில் நன்கொடைபெறவும் பொருள்சேர்க்கவும் தர்மநிதி சேர்க்கவும் அவ்வப்போது எழும் பெயர் குறித்த தேவைக்கு நிதிசேர்க்கவும் உரித்துடையவராகின்றனர்.

(iii) ஆலயத்தின் அசையும் அசையாச் சொத்துக்களினை வங்கிகள் நிதி நிறுவனங்களில் வைப்பிலிடவும் முதலிடவும் வளத்தினைப் பெருக்கவும் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பேரில் இக் கோவையின் பிரமாணங்கள், சபையின் நோக்கத்திற்கு உட்பட்டதாக நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருளாளருக்கு அதிகாரம் வழங்க நிர்வாக சபை கடமைப்பட்டுள்ளது.

(iv) அத்தகைய இப்பிரமாணத்தின் (iii) பந்தியில் குறிப்பிடப்பட்ட முதலீடுகள், வைப்பீடுகள், வளப் பெருக்கல்கள் என்பன இந்து சமய தார்மீக தர்ம ஒழுக்க நியதிகட்கு உட்பட்டதாகவும் சமூகத்தின் உறுப்பினர்களைப் பாதிக்காததாகவும் இருத்தல் வேண்டும்.

(v) ஆலயத்தின் பேரில் அசையாச் சொத்துக்களை வாங்கவும் பேணவும் பெருக்கவும் முடியும் என்பதுடன் அவற்றினை நன்நோக்கிற்காக இக் கோவையின் பிரமாணங்களின் படி பயன்படுத்தவும் முடியும் .

(vi) இக்கோவையின் பிரமானம் 22 (ii) இன் படி ஆலயத்தின் அசையும் அசையாச் சொத்துக்கள் இக்கோவையின் பிரமாணங்கள் செயற்பாட்டுக்கு வந்து ஒரு வருடத்திற்குள் ஆலய பரிபாலனசபையின் பெயருக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(vii) புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயம், அதன் ஆதன வருவாய்கள், நிலங்கள் கட்டிடங்கள், வளாகங்கள், மற்றும் அசையும் அசையாச் சொத்துக்கள் எத்தன்மையினதும் அல்லது எவ்வகையினதுமான எதுவாயினும் புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயத்துக்கு உரியனவாகக் கூறப்படுகின்ற மற்றெல்லா அசையும் அசையா சொத்துக்கள் ஆகியனவும் ஆலயத்தின் பெயரால் எவரொருவராலோ வைத்திருக்கப்பட்டுள்ள அல்லது சொந்தமாகக் கொள்ளப்பட்டுள்ள பணங்கள், ஆவணங்கள், சட்டபூர்வமான பத்திரங்கள், உடமை, உரிமைச் சான்றுகள் மற்றெல்லா உடமைகள், உரித்துக்கள், கோரிக்கைகள் ஆகியனவும் இக்கோவையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆலயபரிபாலனசபையிடம் கையளிக்கப்பட வேண்டும்.

(viii) நிர்வாகசபை இக் கோவையின் பிரமாணங்களின் கீழ் கடமையேற்றதும் ஆலயத்தின் அனைத்துச் சொத்துக்களையும் அதன் ஆதன வருவாய்களையும் சட்டபூர்வமாகப் பொறுப்பேற்க வழிசெய்யும் முகமாக சொல்லப்பட்ட புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் ஆதனங்களையும் அதன் மூலமான வருமானங்களையும் ஆலயபரி பாலனசபையிடம் கையளிக்க உரிய நீதிமன்றத்தில் கையளிப்புக்கட்டளைக்கு விண்ணப் பித்து பெறுவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 30. சட்டமும் சட்ட அதிகாரமும்

(i) இவ் ஆலய பரிபாலனசபையானது இலங்கை ஜனநாயகக் சோசலிச குடியரசின் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டது என்பதுடன் இவ் ஆலய பரிபாலனசபை தொடர்பில் எழுக் கூடிய எந்த ஒரு பிணக்குகளும் இலங்கையின் சட்டவிதிகட்கு உட்பட்டே தீர்க்கப்பட வேண்டும்.

(ii) புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை என்ற பெயரில் அழைக்கப்படும் இச்சபையானது பூரண சட்டஅதிகாரம் கொண்டதும் ஆதனங்களை வாங்கவும், பேணவும், விற்கவும் அதன்பெயரில் பொதுமக்களின் சொத்தாக அதைக்காக்கவும் இவ்வூர் மக்களால் அதிகாரம் வழங்கப்பட்ட சபையாகிறது.

(iii) இச்சபையானது தொடர்ந்து செல்லும் சட்டத் தொடர்ச்சி கொண்டதாகிறது.

(iv) இலங்கை ஜனநாயகசோசலிச குடியரசின் நம்பிக்கைப் பொறுப்புச் சட்டவிதிகள் இவ் ஆலய பரிபாலனசபையினையும் நம்பிகைப் பொறுப்பாளர்களையும் கட்டுப்படுத்தும் என்பதுடன் இச் சபையும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கும் கடப்பாடு உடையதாகிறது.

(v) இவ் ஆலய பரிபாலனசபையின் நம்பிக்கைப்பொறுப்பில் விடப்பட்டிருக்கும் ஆலயம், அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்கள், நிதிவருமானங்கள் அனைத்தினையும் இச்சபை மட்டுமே பேணிப்பராமரிக்க வேண்டும் என்பதுடன், அனைத்து பிணக்குகளும் நம்பிக்கைப்பொறுப்புச் சட்ட விதிகளின்படியும் இத்தேசத்தின் சட்டத்தின்படியும்தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

(vi) இவ் ஆலய பரிபாலனசபையினை மேலும்வலுப்படுத்தவும், சட்ட நுணுக்கங்களின் கீழ் செழுமைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ள புற்றளை வட்டார இந்துப்பெருமக்கள் இப் பிரமாணங்களின் கீழ் உருவாக்கப்படும் நிர்வாக சபையினருக்கு பூரண அதிகாரம் அளித்து பிரகடனப்படுத்துகின்றனர்.

(vii) இக்கோவையின் பிரமாணங்கள் செயல்பாட்டுக்கு வந்து மூன்று மாத காலத்தினுள் 'புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை ' என்ற பெயரிலான பொது தர்ம நம்பிக் கைப் பொறுப்பு (Charitable trust) உறுதிநிறைவேற்றப்பட வேண்டும் என்பதுடன் அவ் நம்பிக்கைப் பொறுப்பு இக்கோவையின் பிரமாணங்களை தன்னகத்தே உள்ளடக்கியதாக இருக்கவும் வேண்டும்.

## 31. ஆலயத்தின்பூசைகள், பண்டிகைகள், திருவிழாக்கள் அவற்றிக்கான உபயங்கள்

(i) ஆலயத்தின் நித்திய பூசைகள் காலாகாலமாக பின்பற்றப்பட்டு வரும் நியதிகளின்படி நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் நிர்வாக சபை தீர்மானித்து முன்மொழிந்து பொதுச்சபை பிரமாணம் 13(i) இன் படியான பெரும்பான்மையுடன் நிறைவேற்றக்கூடிய மாற்றங்களின் கீழ்மட்டுமே நித்திய பூசை ஒழுங்குகள் மாற்றி அமைக்கப்படமுடியும்.

(ii) பூசைகள், பண்டிகைகள், திருவிழாக்கள் என்பவற்றின் உபயங்கள் ஏலவே இருந்து வரும் வழமைகளின் கீழ் தொடர்ந்தும் நடாத்தப்பட வேண்டும் என்பதுடன் உபயகாரர் எவரும் தாமாக முன்வந்து தமது உபயத்தினை துறக்கும்வரை அவர்களே நடாத்திவருதல் வேண்டும் என்பதுடன் எவரேனும் அவ்வாறு துறந்தால் புற்றளை வட்டார மக்களிற்கு அறிவித்தல்

கொடுத்து அழைப்பு விடுத்துஒன்றுக்கு மேற்பட்டோர் உபயத்தினை நடாத்த முன் வந்தால் இணக்கத்தின் அடிப்படையில் அல்லது பொதுச்சபையின் பெரும்பான்மைத்தீர்மானத்தின் பேரில் உபயங்கள் புதியவர்கட்கு வழங்கப்படலாம்.

(iii) ஆலயத்தின் பூசைகள், பண்டிகைகள் திருவிழாக்கள் அவற்றிக்கான உபயங்கள் தொடர்பில் எழும் பிணக்குகளுக்கு பொதுச்சபையின் முடிவே இறுதியானதும் முடிவானதும் ஆவதுடன் பிணக்கின் தரப்புக்கள் முடிவை ஏற்று ஒழுகவும் வேண்டும் .

## 32. ஆலய பரிபாலனசபையின் இலச்சினையும் பயன்பாடும்

இக்கோவையின் பிரமாணங்களின் படி உருவாகும் நிர்வாகசபையானது ஆலய பரிபாலனசபைக்கான இலச்சினையினை வடிவமைத்தல் வேண்டும் என்பதுடன் இலச்சினையினை ஆலயபரிபாலனசபை தொடர்புபட்ட அனைத்து ஆவணங்களிலும் பயன்படுத்துதல் வேண்டும்.

33. (i) இக்கோவையின் பிரமாணங்கள் பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் அமுலுக்குவந்த தினத்தில் இருந்து இவ்வாலயம் தொடர்பில் அதன் பரிபாலனம் உரிமை தொடர்பில் இதற்கு முன்னதாக நிறைவேற்றப்பட்ட ஆவணங்கள்அனைத்தும்செயல் இழந்து விடுவதுடன் வலு இழந்ததாகிறது என்பதுடன் அவற்றினை பயன்படுத்துதல் சட்ட விரோதமாகின்றது என்பதுடன் இக்கோவையின் பிரமாணங்களின் கீழாக உருவாக்கப்படும் நிர்வாகசபை அவற்றினை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரவும் சட்ட நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் பெறுகிறது.

(ii) இக்கோவையின் பிரமாணங்கள் அமுலுக்கு வந்த பின்பு இவ்வாலயம் தொடர்பில் அனைத்து செயல்பாடுகளும் இச்சபையின் நிர்வாக சபையின் கீழ் வருவதுடன் நிர்வாக சபையின் அனுமதி இன்றி அனைத்து செயற்பாடுகளும் சட்ட விரோதமாவதுடன் நிர்வாக சபை சட்ட நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் பெறுகிறது.

## 34. துணைவிதிகளும் / பிரமாணங்களும்

ஆலய பரிபாலனசபையினையும் அதனைச்சார்ந்தவைகளையும் முறையாகவும் பயனுறுதியுள்ளதாகவும், நிர்வகிக்கவும் முகாமைத்துவம் செய்யவும் கட்டுப்பாட்டுடன் இயக்கவும் இக்கோவையின் வாசகங்களுக்கு முரணற்றவையாக துணை விதிகளையும்/ பிரமாணங்களையும் இயற்றவும், நடைமுறைப்படுத்தவும் நிர்வாக சபைக்கு அதிகாரமுண்டு என்பதுடன் அத்தகைய துணை விதிகளும் பிரமாணங்களும் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்களின் உரிமைகள், கடமைகள் செயற்பாடுகள்பொறுப்புக்கள் எதனையும் பாதிக்கக்கூடியதாக அமைதல் ஆகாது என்பதுடன் அவைநிறைவேற்றப்படவும் முடியாது.

## 35. இடைக்கால ஏற்பாடுகள்

(i) இக்கோவைத்திட்டத்தின் கீழான முதலாவது பதிவேட்டினை தயாரிக்கும் பொறுப்பினை தற்போது இத்திகதியில் பதவிவகிக்கும் செயலாளர் வகிப்பார் என்பதுடன்இத்திகதியில் தலைவராக இருப்பவரே இக் கோவைத்திட்டம் நிறைவேற்றப்படும் பொதுச்சபைக் கூட்டத்தினையும் தலைமை தாங்கி நடத்திவைப்பார். தலைவர் கூட்டத்திற்கு சமூகமளிக்காத சந்தர்ப்பத்தில் உபதலைவரும், உபதலைவரும் சமூகமளிக்காத சந்தர்ப்பத்தில் பொதுச்சபை தற்காலிகமாக பொதுச்சபைக்கூட்டத்தை நடாத்தி வைப்பதற்கு சமூகமளித்துள்ள புற்றளை வட்டார இந்து பொதுமக்களில் ஒருவரை தலைவராக தெரிவுசெய்து கூட்டத்திற்கு தலைமை தாங்க கோரலாம்.

(ii) இக்கோவை நடைமுறைக்கு வந்து முதல் ஐந்து ஆண்டுகாலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகசபை உறுப்பினர்களைப் பொறுத்த வரை நிர்வாகசபை உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்படுவதற்கு உடன் முன்பாக பிரமாணம் 15(i) (ஆ) தேவைப்படுத்துகின்ற தொடர்ச் சியாக ஐந்தாண்டு காலத்திற்கு உறுப்புரிமையுள்ளவராக இருத்தல் வேண்டுமென்ற தகைமை தளர்த்தப்பட வேண்டுமென்பதோடு பிரமாணம் 3 இன்படி உறுப்பினராக உள்ள எவரும் நிர்வாகசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவராவார். இத்தகைய தளர்வு இக்கோவையின் பிரமாணங்கள் நடைமுறைக்கு வரும் திகதியிலி ருந்து முதல் ஐந்து ஆண்டு காலத்திற்கு செல்லுபடியானதாயிருக்கும்.

## 36 பொருள்கோடல்

(i) 'புற்றளை வட்டார இந்துப் பெருமக்கள்' என்பதானது புற்றளைப் பிள்ளையார் கோயி லைச்சுற்றியும், புற்றளைக் கிராமத்தினை உள்ளடக்கியும் புற்றளைப்பிள்ளையார் மீது பக்திகொண்டு வணங்கும் செறிவான அடியார்களைக் கொண்டதும் புற்றளைப்பிள்ளை யார் கோயிலுடன் தொடர்ச்சியான நிலப்பரப்பு ரீதியான உறவினை கொண்டதுமான பகுதி கள் அனைத்தும் புற்றளை வட்டாரமாகிறது என்பதுடன் இதுகுறித்த அடையாளம் காணு கைக்கு தன்னை புற்றளை வட்டார இந்துமகன் என உறுதிப்படுத்துமாறு கேட் கப்பட்டால் அதனை அவர் நிர்வாகசபைக்கும் பொதுச்சபைக்கும் உறுதிப்படுத்தவேண்டும் என்பது டன் பொதுச்சபையின் முடிவே இறுதியானதாகும் என்பதாகிறது. இவ்வட்டாரத்தில் வதியும் அல்லது நிரந்தரவதிவிடத்தைக் கொண்டிருப்பதுடன் தற்போது தற்காலிகமாக வேறு இடத்தில்வதியும் எவரும் புற்றளை வட்டார இந்து பெருமக்கள் என கருதப்பட வேண் டும்.

(ii) 'பிரமாணங்கள்' ('விதிகள்') என்பதாவது இக்கோவையின் பிரிவுகள், உபபிரிவுகள், உட்பிரிவுகள் அனைத்தையும் உள்ளடக்கும்.

(iii) 'கோவை' என்பதாவது இதனகத்துள்ள பிரமாணங்களின் தொகுப்பான பொதுச்சபை யால் அங்கீகரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்தத் தொகுப்பு ஆகும்.

(iv) 'நிறைவெண்' என்பதாவது இக்கோவையின் பிரமாணங்களின்படி பொதுசபைக்கூட்டமோ அல்லது விசேட பொதுசபைக்கூட்டமோ கூட்டப்படுவதற்கு பிரசன்னமாகி இருக்கவேண்டிய வாக்களிக்கத் தகுதிபெற்ற உறுப்பினர்களது எண்ணிக்கையாகும். இது இருபத்தைந்து என்பதாகிறது.

(v) 'போஷகர்' என்பவர் ஆலயத்தின் பிரதமகுரு ஆவார். இது ஒரு கௌரவப்பதவி என்பது டன் இவர் ஆலய பரிபாலனசபைக்கு ஆலோசகராக மட்டும் செயற்படுவார்.

(vi) 'கணக்காய்வாளர்' - ஆலய பரிபாலனசபையின் நிதிப்பயன்பாட்டினை ஆய்வு செய்து அறிக்கையிடும் தொழில் ரீதியில் அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்.

(vii) 'நிர்வாகச் செயலாளா' - நிர்வாக சபையால் காரியாலயப்பணிகட்காக ஊதியம் வழங் கப்பட்டு நியமிக்கப்படும் உத்தியோத்தர். நிர்வாக சபையின் கட்டளைக்குக்கட்டுப்பட்ட ஊழி யர். இவர் தீர்மானம் எடுக்கும் அந்தஸ்து அற்றவர்.

(viii) 'பரிபாலன உத்தியோகத்தர்கள்' - நிர்வாகச் செயலாளரின் கீழ்பணிபுரியும் காரியாலய ஊழியர்கள்.

(ix) 'பொதுச்சபை'- ஆலய பரிபாலனசபையின் அனைத்து உறுப்பினர்களையும் கொண்ட மகாசபை இதுவாகும்.

(x)"பொதுச்சபைக்கூட்டம்" - ஆலய பரிபாலனசபையின் அனைத்து உறுப்பினர்களதும் பொதுச்சபை நடாத்தும் கூட்டம் இவ்வாறு அழைக்கப்படும்.

(xi) "நிர்வாகசபை"- பொதுச்சபைக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒன்பது உறுப்பினர் களைக் கொண்ட ஆலய பரிபாலனசபையின் நிறைவேற்று குழு வாகும். நம்பிக்கை பொறுப் புச் சட்ட விதிகளின் தேவைக்காக நம்பிக்கைப் பொறுப்புச்சபையாகவும் விளங்கும்.

(xii) "சுதந்திரமான விசாரணையாளர்கள் குழு" - பிரமாணம் 5(1)இன் தேவைக்காக செயலாள ரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் சுதந்திரமான விசாரணையாளர்கள் குழு மூன்று உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், புற்றளை மகா வித்தியாலய அதிபர், ஓய்வு பெற்ற நீதிபதி, ஆலய பிரதமகுருக்கள், கிராமசேவகர் ஓய்வு பெற்ற அரச சேவை உறுப்பினர், சமூகப்பெரியோர் என்போரிலிருந்து நிர்வாகசபை பெயர் குறித்து நிய மிக்கும் எவரினையும் அத்தகைய குழுவின் உறுப்பினராக கொண்டிருக்க வேண்டும். பிர மாணம் 5 (ii) இன் கீழான நிர்வாகசபை உறுப்பினர் சம்பந்தமான விசாரணைகட்காக சுதந் திர விசாரணையாளர்கள் குழுவை மேற்குறிப்பிட்டவர்களிலிருந்து பொதுச்சபை தெரிவு செய் யும்.

இவ் புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் பிரமாணங்களின் கோவை 2004ம் ஆண்டு ஐப்பசி மாதம் 03ம் திகதி (03.10.2004) அன்று நடைபெற்ற பொதுச் சபைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது என்பதுடன் மேற்குறிப்பிடப்பட்ட இத்திகதியில் (03.10.2004) இருந்து அமுலா கிறது.

(ஒப்பம் சோ. ஜெயபாலசுந்தரக்குருக்கள்)
**தலைவர்**

(ஒப்பம் ந.கணேசலிங்கம்)
03/10/2004
**செயலாளர்**

-முற்றும்-

# புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் உறுதி மொழி

நாம் ஒரு குடும்பமாக இருப்போம். அன்புடனும் மரியாதையுடனும் ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டிருப்போம். நாம் ஒரு சேனை மாதிரி உழைப்போம். தைரியத்துடனும், ஒழுக்கத்துடனும், நம் உள்ளும் புறமும் இருக்கும் எல்லாவிதத் தாழ்ந்த மனப்பான்மைகளையும் பொய்யான மதிப்பீடுகளையும் (கருத்துக்களையும்) எப்பொழுதும் எதிர்த்துப் போராடத் தயாராக இருப்போம். நாம் நேர்மையாக (உண்மையாக) வாழ்வோம். தியாகமும் உழைப்புங்கொண்டு கம்பீரமாக வாழ்ந்து, நாம் உண்பதற்கு மேலாக அதிக உற்பத்தியைப் பெருக்கியும், நாம் எடுத்துக் கொள்வதற்கும் மேலாக அதிகமாகவும் கொடுப்போம். நம்மை நேர்மையான தைரியமான புத்திசாதுரியமான பாதையில் நடத்திச் செல்வதற்கு நாம் புற்றளைசித்தி விநாயகரின் கருணையை நாடுவோம். அவருடைய கருணையும், நல்லாசியும் நம் மூலமாக, நம்மைச் சுற்றிலுமுள்ள இந்த உலகுக்குப் பரவட்டும். நாம் நம் தேசத்திற்கு உழைப்பது மேலான அந்த புற்றளை யானுக்கு உழைப்பதாகவும், ஜனங்களுக்குக் காட்டும் பக்தி உள்ளம் எல்லாம் வல்ல சுயரூபிக்கு காட்டும் பக்தியாக நாம் நம்புகிறோம். நம்முடைய கடமைகளை நாம் உணர்ந்திருக்கிறோம். அவைகளைப் பூர்த்தி செய்ய எங்களுக்கு வேண்டிய அன்பும், காருண்ணியமும், சக்தியும், தைரியமும் கொடுத்தருள்வாயாக.

ஓம் கணபதியே நம

ஓம் கணபதியே நம

ஓம் கணபதியே நம

ஓம்

ஓம்

உ

சிவமயம்

# விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ணமருங்கில் வளர்ந்தழ(கு) எறிப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழ் ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு(து) என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்(து) அருளி
மாயாப்பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள் என
வாடா வகைதான், மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தால் கொடு வினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடையிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையில் சுழிமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக்(கு) அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப்படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்(கு) அருளி
என்னை அறிவித்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழிகாட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளேயே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சுக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

# புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்

## புற்றளை

## புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை
## உறுப்பினர் விண்ணப்பப்படிவம்

---

முழுப்பெயர் : ..................................................

(ஆங்கிலத்தில்) : ..................................................

நிரந்தர முகவரி : ..................................................

..................................................

வதிவிடமுகவரி : ..................................................

..................................................

தொலைபேசி இல. : ............................ ● (e-mail)..................................

பிறந்ததிகதி : .................................... ● (ஆண் / பெண்)

தொழில் : ..................................................

ஆலயஉபயகாரர் : ஆம் / இல்லை ● (திருமணம் ஆனவரா / இல்லையா)

ஆம் எனின் விபரம் : ..................................................

சமய/பொதுப்பணி } ..................................................

குறித்த ஈடுபாடுகள் ..................................................

உறுப்புரிமை : சாதாரண உறுப்பினர் / ஆயுட்கால உறுப்பினர். (சாதாரண உறுப்பினர் ஆண்டு சந்தா ரூபா.200/=, ஆயுட்கால உறுப்பினர் சந்தா 3000/=)

சந்தாப்பணம் : பணம் / காசோலை / காசுக்கட்டளை / ............. ரூபா.........

புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் பிரமாணங்களின் கோவை குறித்துரைக்கும் தகைமைகளினை கொண்டுள்ளேனென்றும், கோவைக்கு கட்டுப்பட்டு ஒழுகுவேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................  ..........................

திகதி  கையொப்பம்

**விண்ணப்பம் வந்து சேர வேண்டிய முகவரி** } புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை, புற்றளை சித்தி விநாயகர் ஆலயம், புற்றளை, புலோலி தெற்கு, புலோலி. இலங்கை.

**(தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறைக்கிளை, சேமிப்புக் கணக்கு இல: 1082 இல் உங்கள் நன்கொடையினை வைப்புச் செய்யலாம்)**

---

**அலுவலக உபயோகத்திற்கு மட்டும்**

| உறுப்புரிமை இல. |
|---|

புற்றளைவாசி : ஆம் / இல்லை

வயது :

சந்தா செலுத்தப்பட்டுள்ளது : ஆம் / இல்லை  பற்றுச்சீட்டு இல :...............

குறிப்பு : ..................................................

......................  ......................  ......................  ......................

திகதி  தலைவர்  செயலாளர்  பொருளாளர்